**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.1185/2025 | Date | : 13.03.2026 |
| Deposition of Witness for | : **அ.சா.1** | Taluk | : |
| Name | : **காதர்மைதீன்** | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.03.2026

(எதிரி ஆஜர் . எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது தெற்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.04.2025ம் தேதியன்று மாலை 16.30 மணிக்கு சட்டவிரோத மது விற்பனை, லாட்டரி சீட்டு விற்பனை மற்றும் இதர குற்றங்களை கண்காணிக்கும் பொருட்டு நானும், தலைமைகாவலர் அருண்குமார் என்பவரும் உதவி ஆய்வாளர் தினேஷ்குமார் என்பவருடன் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது, உதவி ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் ஈரோடு கொல்லம்பாளையம், பள்ளி மைதானம் அருகில் கண்காணித்தபோது ஒரு பையில் ஏதோ வைத்துக்கொண்டு சந்தேகத்திற்கிடமாக ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவர் எங்களை பார்த்தவுடம் தப்பி ஓட முயற்சித்தவரை நாங்கள் சுற்றிவளைத்து பிடித்து விசாரிக்க, அவர் தனது பெயர் மோகன்ராஜ் என்றும் தற்போது கொல்லம்பாளையம், கஸ்பா பேட்டை, ஈரோட்டில் குடியிருப்பதாகவும் சொன்னார்.

2. பின்பு அவரை உதவி ஆய்வாளர் விசாரித்த போது, எவ்வித அரசு அனுமதியின்றி பனங்கள்(TODDY) சுமார் 05 லிட்டரை தனது சுயலாபம் கருதி

மொத்தமாக நாமக்கல்லில் வாங்கி சில்லறையாக விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைது செய்வதற்கான காரணத்தை கூறி உதவி ஆய்வாளர் மாலை 16.45 மணிக்கு கைது செய்தார். அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள நபர்தான் மோகன்ராஜ் ஆவார்.

3. பின்பு மாலை 17.00 மணிக்கு எதிரி மோகன்ராஜ் ஆஜர் செய்த பனங்கள் சுமார் 05 லிட்டரை அந்த இடத்தில் பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். நாங்கள் சாட்சியாக மகஜரில் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். இரண்டாவது சாட்சி கையொப்பம் அருண்குமாருடையதாகும். (**கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. சம்பவ இடத்திலிருந்து உதவி ஆய்வாளர் கைப்பற்றிய பனங்களை அதே இடத்தில் மாலை 05.30 மணிக்கு அங்கேயே கீழே கொட்டி எங்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டது. பின்னர் உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அழித்தல் மகஜர் தயார் செய்தார். அதில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அழித்தல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். இரண்டாவது சாட்சி கையொப்பம் அருண்குமாருடையதாகும். **(அழித்தல் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** ஆஜர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் மாலை 18.00 மணிக்கு ஈரோடு தெற்கு காவல்நிலையம் சென்று குற்ற எண். 97/2025 சட்டப்பிரிவு 4(1)(c) TNP ACT 2024 ன் படி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அதற்கு நாங்கள் உதவியாக இருந்தோம். இந்த வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## குறுக்கு விசாரணை

எதிரியை பிடித்ததாக சொல்லப்படும் இடமானது பொதுமக்கள் அதிக நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். நாங்கள் பிடித்ததாக சொல்லப்படுவது பனங்கள் இல்லை என்றும், அது அரசால் அனுமதிக்கப்பட்ட தெலுவு என்றால் இல்லை. அதனால்தான் மேற்படி பிடிபட்ட தெலுவை ஆய்வுக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. மேலும் அதனால் தான் பொதுமக்களை உதவி ஆய்வாளர் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.03.13 17:23:24 -0800

Judicial Magistrate No.III,

Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No.1185/2025 | Date | : | 13.03.2026 |
| Deposition of Witness for | : | அ.சா.2 | Taluk | : | |
| Name | : | அருண்குமார் | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.03.2026

(எதிரி ஆஜர் . எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது தெற்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.04.2025ம் தேதியன்று மாலை 16.30 மணிக்கு சட்டவிரோத மதுவிற்பனை, லாட்டரி சீட்டு விற்பனை மற்றும் இதர குற்றங்களை கண்காணிக்கும் பொருட்டு நானும், தலைமைகாவலர் காதர்மைதீன் மற்றும் உதவி ஆய்வாளர் தினேஷ்குமார் என்பவருடன் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது, உதவி ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் ஈரோடு கொல்லம்பாளையம், பள்ளி மைதானம் அருகில் கண்காணித்தபோது ஒரு பையில் ஏதோ வைத்துக்கொண்டு சந்தேகத்திற்கிடமாக ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவர் எங்களை பார்த்தவுடம் தப்பி ஓட முயற்சித்தவரை நாங்கள் சுற்றிவளைத்து பிடித்து விசாரிக்க, அவர் தனது பெயர் மோகன்ராஜ் என்றும் தற்போது கொல்லம்பாளையம், கஸ்பா பேட்டை, ஈரோட்டில் குடியிருப்பதாகவும் சொன்னார்.

2. பின்பு அவரை உதவி ஆய்வாளர் விசாரித்த போது, எவ்வித அரசு அனுமதியின்றி பனங்கள்(TODDY) சுமார் 05 லிட்டரை தனது சுயலாபம் கருதி மொத்தமாக நாமக்கல்லில் வாங்கி சில்லறையாக விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைது செய்வதற்கான காரணத்தை கூறி உதவி ஆய்வாளர் மாலை 16.45 மணிக்கு கைது செய்தார். அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள நபர்தான் மோகன்ராஜ் ஆவார்.

3. பின்பு மாலை 17.00 மணிக்கு எதிரி மோகன்ராஜ் ஆஜர் செய்த பனங்கள் சுமார் 05 லிட்டரை அந்த இடத்தில் பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். நாங்கள் சாட்சியாக மகஜரில் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். முதலாவது சாட்சி கையொப்பம் காதர்மைதீனுடையதாகும். **(கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. சம்பவ இடத்திலிருந்து உதவி ஆய்வாளர் கைப்பற்றிய பனங்களை அதே இடத்தில் மாலை 05.30 மணிக்கு அங்கேயே கீழே கொட்டி எங்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டது. பின்னர் உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அழித்தல் மகஜர் தயார் செய்தார். அதில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். முதலாவது சாட்சி கையொப்பம் காதர்மைதீனுடையதாகும். **(அழித்தல் மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** ஆஜர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் மாலை 18.00 மணிக்கு ஈரோடு தெற்கு காவல்நிலையம் சென்று குற்ற எண். 97/2025 சட்டப்பிரிவு 4(1)(c) TNP ACT 2024 ன் படி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அதற்கு நாங்கள் உதவியாக இருந்தோம். இந்த வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

எதிரியை பிடித்ததாக சொல்லப்படும் இடமானது பொதுமக்கள் அதிக நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். நாங்கள் பிடித்ததாக சொல்லப்படுவது பணங்கள் இல்லை என்றும் அது அரசால் அனுமதிக்கப்பட்ட தெலுவு என்றால் இல்லை. அதனால்தான் மேற்படி பிடிபட்ட தெலுவை ஆய்வுக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. மேலும் அதனால் தான் பொதுமக்களை உதவிஆய்வாளர் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.03.13 17:23:32 -0800

Judicial Magistrate No.III,

Erode.